REG. NO. M. 2997.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

தனிப்பிரதி அணா 1

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. | புதுவை, பவ ஹு தை மீ கக உ (24—1—35) | NO. 9.

## திருமந்திரம்.

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கிற்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியு
மணந்தெழு மோசை யொலியது காணுந்
தணந்தெழு சக்கரந் தான்றரு வாளே.

மாயா வுபாதி வசத்தாகுஞ் சேதனத்
தாய குருவரு ளாலே யதிற்றாண்ட
வோயு முபாதியோ டொன்றினேன் றுதுயி
ராய துரியம் புகுந்தறி வாகவே.

ஆணைய மாய்வருந் தாது ளிருந்தவர்
மாணைய மாய மனத்தை யொருக்கிப்பின்
பாணைய மாய பரத்தை யறிந்தபின்
றுணைய மாய தனுதனந் தானே.

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே வெளியுறத் தானேக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணா ளடைக்கும் வழியது வாமே.

மேலை நிலத்தினு ளள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தி லெழுகின்ற மூர்த்தியை
யேல வெழுப்பி யிவளுடன் சந்திக்கப்
பாலனு மாவான் பார்நந்தி யாணையே.

கடைவாச லைக்கட்டிக் காலை யெழுப்பி
யிடைவாச னேக்கி யினிது ளிருத்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பா
ருடையாம லூழி யிருக்கலு மாமே.

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை,
பவ ஹூ தை மீ 11 உ

## வேதாந்த சித்தாந்தம்.

இந்து சமயிகள்—சைவ சமயிகள் எனப்படுவோருள்ளே தத்துவப் பெரியார் அநுபவத் திருவாக்குக்களாகிய "வேதாந்தம்" "சித்தாந்தம்" என்னும் திருநாமங்கள் பெருவழக்காகிமலிந்துள்ளன. தம்மை "வேதாந்தி" எனவும் "சித்தாந்தி" எனவும் கௌரவமாகப் பேசி அமைவார் பலர். வேதாந்தம் சித்தாந்தம் என்பன வேறு வேறு கொள்கைகள் எனத் துணிந்து "இவர் வேதாந்தி" "அவர் சித்தாந்தி" என வேறு படுத்துக் கூறுவதும்,வேதாந்தசித்தாந்தங்களுக்கு உயர்வு தாழ்வு பேசிச் சர்ச்சை விளைத்தும்—விளைப்பதும் பெரு வழக்காயின. சிலர் இவற்றின் உண்மைப் பொருளைக் குருவருளால் அறிந்து இத் தத்துவங்களை அடைய முடியாது, படிப்பு வல்லபத்தால் இவற்றிற்கு உயர்வு தாழ்வு பேசித் தாம் கண்டுபிடித்த கொள்கையே வேதாந்தம் என முடிபு செய்தும், தமது அறிவுக்கு ஏற்ற வாறு மனோதர்மத்தால் கற்பனை செய்யப்பட்ட வேறு பல கொள்கைகளையும் வேதாந்தம் என வழங்கும் கொள்கையையும் பூர்வ பட்சமாக்கித் தாம் கண்டு பிடித்த சில கொள்கைகளையே வாய்மையான சித்தாந்தம் என்று சித்தாந்தம் செய்தும் இலக்கண இலக்கியத் திறமை தோன்ற நூல்களையும் பாடியங்களையும் வாலியம் வாலியமாக எழுதி உலக மாக்களை மயங்க வைத்து மாண்டு போயினர். இத்தகைய நூல்கள் சிலவற்றிற்குத் தெய்விகமும் இந்நூலாசிரியரது வழித் தோன்றல்களால் கற்பிக்கப் பட்டன. இந் நூல்களே வேத உண்மைகள்—சிவ வாக்குக்கள் என இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த "சாரங்கள்" "சுருக்கங்கள்" "சங்கிரகங்கள்" "பிரகாசிகைகள்" "தீபிகைகள்" முதலியனவும் விரிவுரைகள் கட்டுரைகளும் மிகப் பலவாயின. இத்தகைய வேதாந்த சித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் இடங்கள் என்று குபேர சம்பத்து வாய்ந்த மடங்களும் அமைந்து விட்டன. இவற்றின் உண்மைகளை உலக மாக்களுக்கு விளக்குவதையே வியாஜ (சாட்டு) மாகக் கொண்டு புத்தகப் பிரகடனங்களும் பத்திரப் பிரகடனங்களும் பெரு வரவிற்றாக நிகழுகின்றன; கூட்டங்கள், சங்கங்கள், சமாஜங்களும் ஓய்வு நாட்களில் ஆண்டாண்டு தோறும் குதூஹலத்தோடு கோலாகலமாக நிகழுகின்றன; "சொற்பொழிவு"களும் தமோ மேகம் போல வருஷிக்கப்படுகின்றன. இன்னோரன்ன அரிய பெரிய இயக்கங்களால் ஆம் பயன் என்னையோ? எனின், ஒரு சிலர் பஞ்சமறியாமலும் ஏழை மக்கள் துன்பமறியாமலும் லௌகிகப் போலிப் புகழால் ஆன மகிழ்ச்சியின் மைந்துற்றுச் செடியூனுடலோம்பி ஊழான் வரையறுக்கப்பட்ட கால அளவில் தென்புலக்கோமகனுக்கு நல் விருந்தாதலே ஆகின்றது. அன்றி வேதாந்த சித்தாந்த உண்மைகளை அறிந்து ஒழுகுவோர் உளரோ? என்றால், உடன்பாடாக உத்தரம் கூறுதல் அசாத்தியமே ஆகின்றது.

வேதாந்தம் சித்தாந்தம் என்பன வாய்மையில் உயரிய தத்துவங்களே ஆகும். இத் தத்துவங்களை அடையப் பெற்றவரே சிவன் முத்தராவர். வேதம் முதலிய திருநாமங்கள் உலகில் வழங்கும் சில நூல்களுக்கு இடுகுறியாகி அமைந்தது போலவே, வேதாந்தம் சித்தாந்தம் என்னும் திருநாமங்களும் இந் நூல்களின் முடிபுகளுக்கு இடுகுறியாகி அமைந்துள்ளன. வேதம் ஆகமம் முதலிய அரிய பெரிய நூல்களும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம், திருவாய்மொழி முதலியனவும் வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்குவனவும் வேதாந்த சித்தாந்தம் என்னும் உயரிய தத்துவங்களைக் குருவருளால் அடைய வேண்டும் என இவற்றின் உண்மைகளையே மறை பொருளாகக் கூறுவனவாகும். குருவருளால் அன்றி இவற்றின் உண்மைகளை அறிதலும் இவற்றை அடைதலும் முடியாத காரியமேயாகும். உலகில் வேதநூல்கள் என வழங்குவன சிலவற்றின் ஞானகாண்டம் எனப்படும் முக்கியமான உபநிடதங்களும் இவற்றை அடிப்படையாகக் கொண்ட வியாச சூத்திரமும் வேதாந்த நூல்கள் என வழங்கப்படுகின்றன. பொதுவாக, ஆகமங்கள் என வழங்குவனவற்றின் உத்தர காண்டங்களிலும், சிறப்பாக, வீராகம வாதுளாகமங்களின் பூர்வ உத்தர காண்டங்களிலும் சிவாத்வைதம் எனப்படும் வேதாந்த சித்தாந்த தத்துவ உண்மையே விதந்து கூறப்படுவதாகும். வேதாந்த சித்தாந்தங்கள் தம்

முள் வேற்றுமை உடையன ஆகா. வேத நூன் முடிபும் ஆகம நூன் முடிபும் ஒன்றே என்ப. பின் வரும் பிரமாணங்கள் இவ் வுண்மையை நன்று வற்புறுத்துகின்றன.

### சித்தாந்த சிகாமணி.

செப்பும் வேத சித்தாந்த மபேதமாம்
ஒப்பின் மெய்ப் பொருளொன்றே யுரைத் [தலால்
இப் பெருஞ் சொற்கலைக ளிரண்டையும்
வைப்பர் ஒப்பென மானத் தறிஞரே.

ஏக னுற்றருள் காமிகமே முதல்
ஆக மத்தின றைந்திடு மூத்தர
பாக முற்றும் பகர்வீர சைவமாம்
சோக மற்றுயர் தொன்மதந் தோன்றுமால்.

(ஷை உபதேசம் செ 13, 14.)

### சுத்தசாதகம்.

ஆகமமிருபத்தெட்டினின்முடிவா
மாகமம்வாதுளமதனில்
ஏகமென்றியம்புமறையனுசரித்தே
யியம்பிநோன்மறையவையில்
பாகமதுறுஞ்சாமத்தின்முன்னெறியும்
பகர்சிவாத்துவிதவன்னெறியும்
ஊகமதிலங்கவியம்பிடுமெதனு
லுண்மைசாமத்தினின்முடிவே.

(ஷை செ. 6)

வீரசைவம் சிவாத்வைதம் சைவ சித்தாந்தம் என்பன ஒன்றேயாம். வீரசைவ மாண்பும் தொன்மையும் அமயம் நேர்ந்துழி விளக்கமுற உரைக்கப்படும். சாமவேத மகாவாக்கியமாகிய "தத்துவமசி" என்பது அங்க லிங்க ஐக்கிய உண்மையாகிய வேதாந்த சித்தாந்த தத்துவ உண்மையையே விளக்குகின்றது. மேலே காட்டிய செய்யுட்களால் வேத நூன் முடிபும் ஆகம நூன்முடிபும் சிவாத்வைத சித்தாந்தமே என்பது வெள்ளிடையாம். வாய்மையான வேதாந்தம் சித்தாந்தம் எனப்படும் தத்துவத்தை விளக்குவன வாய் உலகில் வழங்கும் நூல்கள் இடுகுறி வேதாந்தமும் இடுகுறிச் சித்தாந்தமுமாகும். வாய்மையான வேதாந்தம் சித்தாந்தம் எனப்படும் உயரிய தத்துவங்களும் அவற்றின் பண்பும் பயனும் யாவை? எனின், ஒரு சிறிது கூறுதும்:—

வேத + அந்தம் வேதாந்தம் எனப்படும். நமது உள்ளும் புறம்பும் ஓவாது ஒலிக்கும் நாதங்களே — அமல நாதங்களே வாய்மையான வேதங்கள் ஆகும்.

"வித்தகம்"
சந்தா நேயர்க்கு
**விண்ணப்பம்.**

எமது இரண்டாம் வருட "வித்தகம்" சந்தா நேயர்களுக்கு அடுத்த இலக்கம் தொடக்கமாக வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ஆதலால் வி. பி. கமிஷன் முதலிய செலவு ஏற்படாவண்ணம் ஒவ்வொருவரும் தம் தம் சந்தா பணத்தைக் கீழே காணப்படும் விலாசத்துக்கு முன்னுக அனுப்பி வைக்கும்படி வணக்கத்தோடு வேண்டப்படுகின்றனர்.

ரா. நாகரத்தினம்.
வித்தகம் ஆபீஸ்,
புதுச்சேரி.
Fr. India.

இவ் உண்மை இதுவரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றுல் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு நன்று விளக்கி நிறுவப்பட்டது. ஆதலின் ஈண்டும் விரித்தல் மிகை. நாத அந்தமே வாய்மையான வேத அந்தம் — வேதாந்தம். இத்தகைய உயரிய தத்துவமாகிய வேத அந்தத்தைக் காண்பது மருளுடம்பினராகிய எம்போலிய உலக மாக்களுக்கு முடியாத காரியம். இத்தத்துவம் படிப்பு வல்லபத்துக்கு எட்டாதது என்பது சொல்லாமலே அமையும். விமல தநுவுடைய — வாய்மையான கல்வியுடைய மெய்யடியாரே இத் தத்துவத்தைக் கண்டு அடைய வல்லராவர். பலகோடி சென்ம நற்றவப் பயனுல் கயிலை முதற் குரவனுகிய சற்குரு நாதன் தரிசனம் பெற்று சட்பேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ப அன்னவன் அருளும் சாதகயோக விதிகளை வழுவற அநுட்டிக்கும் மெய்யடியான் தன்னுள்ளே ஆறு அங்கங்களாகிய ஆறு ஆதாரங்களையும் கண்டு கடந்து அப்பால் ஆரோகண அவரோகணமாய் ஆதி நடு அந்தமாய் அந்தம் நடு ஆதியாய் உள்ளும் புறம்பும் ஓவாது ஒலிக்கும் நாதங்களாகிய வேதங்களையும் கண்டு அவ் வேத அந்தமாகிய நாத அந்தத்தை அடையப் பெறுவன். நாத அந்தமாகிய — நாத பீடமாகிய இவ் விடமே — இவ் அரிய பெரிய தத்துவமே வாய்மையான வேத அந்தம் — வேதாந்தம் எனப்படுவது என்க. நாதாந்த சோதிப் பிழம்பாகிய ஆரியனைத் தன்னுள்ளே கண்டு பாசங்கள் பற்றுக்கள் எல்லாம் அற்று ஆரியனுகும் இடம் — தான் அவன் ஆகும் இடம் இதுவே யாம்.

### திருமந்திரம்.

அண்ண லிருப்பிட மாரு மறிகிலர்
அண்ண லிருப்பிட மாய்ந்துகொள் வார் [கட்
கண்ண லழிவின்றி யுள்ளே யமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன்இவன் ஆமே.

(ஷை 3-ம் தந். காலசக்கரம் செ. 27.)

இத்தகைய வேத அந்தத்தை அடைந்து தான் அவன் ஆகும் சமாதி கைகூடப் பெற்றவனே வேதாந்தி (வேத + அந்தி) — வாய்மையான வேதாந்தி என அறிதல் வேண்டும். இவனே அந்தணன் — அந்தத்தை — வேத அந்தத்தை அணவியவன் — அடைந்தவன். இவனே அறவோன் — அறம் நிலைக்கப் பெற்றவன்; அற

மாகிய முதல் — முதலாகிய இடம் இடமாகிய வீடு நிலைக்கப் பெற்றவன்; தனது சத்தாகிய உடலம் அமல மடைதலால் நித்தியத்துவம் பெற்றவன் என்க. இப் பெற்றி கைவரப்பெறாது — இவ் உண்மைகளை அறியாது உலகில் வேதாந்தம் என வழங்கும் இடுகுறி நூல்களையே படித் துணர்ந்தவரை "வேதாந்தி" எனப் போற்றுவது உலக சம்பிரதாயமான போலி வழக்கேயாகும்.

வேத வடிவாகிய உடலுக்கு — நாத வடிவாகிய உடலுக்கு ("வேதத்தின் ஒத்த உடல்" என்பது திருமந்திரம் திருமூலர் வரலாறு செ. 12) ஆதியும் அந்தமுமாய் விளங்கும் நாதபீடத்தை அடைந்த போது—நாதாந்த சோதிப் பிழம்பாகிய ஆரியனைக் கண்டபோது சத்தாகிய உடலம் ஊனங்கள் அறவே ஒழிந்து பூரண அமலம் அடையும். அஞ்ஞான்று சத்தாகிய அவ் உடலோடு அபேதமாய்க் கலந்து உணர்ச்சி வடிவாய் விளங்கும் சித்து என்னும் உயிரும் (சீவன்) அமலம் பெற்று அந்தத்தை அடையும். அஃதாவது அந்தமாகிய — ஈறாகிய சிவத்தில் கலக்கும் — சிவமாகும் என்க. இவ்வாறு சித்து அந்தத்தை அடைவதே ஈறாகிய சிவத்தில் கலப்பதே (சித்து + அந்தம்) சித்தாந்தம் — வாய்மையான சித்தாந்தம் என அறிதல் வேண்டும். இப் பெற்றி வாய்ந்தவரே வாய்மையான சித்தாந்திகள்—வேதாந்த சித்தாந்தம் என்னும் உயரிய தத்துவத்தை அடைந்தவர்கள். சத்தென்னும் உடலின் அந்தமாகிய வேதாந்தமும் சித்தென்னும் உயிரானது அந்தமாகிய சிவத்திற் கலத்தலாகிய சித்தாந்தமும் சமரசம் பெறும் இடம் இதுவே யாம். இப் பெற்றி வாய்ந்த சீவன் முத்தரே வேதாந்த சித்தாந்த சமரச நிலைகண்ட வித்தகச் சித்தராவர். "சத்தமும் சத்தமுடிபும் தம்முட் கொண்டோர்" (திருமந்திரம்) என வித்தகச் சித்தர் மாண்பு விளக்கப் பட்டமையும் அறிக. இவ்வாற்றால் வேதாந்தம் சித்தாந்தம் என்பன உலக மாக்கள் சிந்தனைக்கும் எட்டாத — போலிக் கல்வியால் அறிய முடியாத உயரிய தத்துவங்களே என்பது வெள்ளிடை மலையாதல் கண்டு கொள்க. இத் தத்துவத்தை அடையப் பெறாதார் தம்மை வேதாந்தி என்றோ சித்தாந்தி என்றோ சமரசநிலை கண்டவர் என்றோ கூறிக் கொண்டால் அவர் பெற்றிதான் என்னை ? இவ் உண்மைகளை அறியாதார் பலர் சில நூல்களைப் படித்தலாலும் சில நடை நொடிகளைக் கைக்கொண்டு போலிச் சத்துவம் வகித்து நடித்தலாலும் தம்மை வேதாந்திகள் எனவும் சித்தாந்திகள் எனவும் துணிந்து செத்துப் போனதும் நேரே கடவுளோடு அத்துவிதமாய்க் கலந்துவிடலாம் என்னும் நம்பிக்கையோடு செடியூனுடலோம்பிச் சாதலை எதிர்பார்த்துச் சோம்பேறிகளாய் வீற்றிருக்க வேண்டியவ ராயினர். சித்தாந்தம் என்னும் இடுகுறியான—போலியான சாத்திரக் கொள்கையே வாய்மையான — உந்நதமான தத்துவமாகிய சித்தாந்த நிலை என்பதும், அத்தகைய கொள்கையும் சந்தான குரவச் சாத்திரங்களுள்ளே தான் அடங்கிவிட்டன என்பதும், உலகியலுக்கு ஒப்ப இலக்கண இலக்கியங்களையும் தருக்க நூல்களையும் படித்துச் சில நடை நொடிகளோடு அச் சாத்திரங்களையும் உரைகளையும் பாடியங்களையும் படித்து முடித்து அவற்றில் தெளிவு பெறுதலே ஞான நிலை என்பதும்; இந் நூல்களுக்கும் உரைகளுக்கும் அப்பால் அறியக்கூடிய ஞானவிஷயம் வேறு இல்லை என்பதும், இந் நூல் கூறிய அநுட்டானங்களைக் கைக்கொண்டு விதியின் வசப்பட்டுச் செத்துப் போவதுதான் உந்நதமான சைவ சித்தாந்த முத்திநிலை என்பதும் தற்காலத்தில் சட்டமாய் விட்டன. வேதம் ஆகமம் முதலியவற்றிலும் திருவாசகம், தேவாரம், திருவாய்மொழி, திருமந்திரம், ஔவை குறள் முதலியவற்றிலும் சித்தர் நூல்கள் என வாய்மையாக வழங்குவன வற்றிலும் வாய்மையான வேதாந்த சித்தாந்த உண்மைகளே கூறப்பட்டிருப்பினும், அவை யெல்லாம் எவ்வளவு அரியனவும் பெரியனவுமாயினும், அவ் உண்மைகள் சந்தான குரவச் சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படவில்லை என்றால் — அந் நூல்களுக்கு மாறுபடுவன என்றால் கூப மண்டூகங்கள் போல அவற்றை ஒப்புக் கொள்ள முடியாது என்பவரே தற்காலத்தில் மிகப் பலராகின்றனர்! என்னே கலியின் புதுமை! பன்னெடுங் காலமாக உண்மைச் சைவ மாண்பு மறைந்துவிட்டமையால் போலிக் கல்வியால் பொருளும் பூசையும் பெறுதலும், புறமதத்தவர் போலச் சில நடை நொடிகளால் செத்த பின்பு சுலபமாக முத்தியடைந்து விடலாம் என்னும் குருட்டு நம்பிக்கையுமே மேலே கூறிய சாத்திரப் பெயர் பூண்ட சில நூற்கொள்கைகளையே வேதவாக்கெனக் கொண்டு — வேதாகம சாரம் எனக் கொண்டு நம்மவர் பல்லோர் அமைந்து செடியூனுடலோம்பிக் களிகூர்ந்து சாதலை எதிர்பார்த்து வீற்றிருப்பதற்குக் காரணமாயின என்பது வெள்ளிடைமலையாம். வாய்மையான வேதாந்த சித்தாந்தங்களின் இயல்புகளை நன்று விளக்கி வலியுறுத்தும் பிரமாணங்கள் தத்துவப் பெரியார் அருளிய நூல்களில் மிக மலிந்துள்ளன. அவற்றுள்ளே ஒரு சில இங்கே காட்டி இக் கட்டுரை முடிக்கப்படும்.

## திருமந்திரம்.

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

(ஷை 1 ம்-தந் அந்தணரொழுக்கம் செ. 6)

[வேதாந்தம் கேட்டும் தம் வேட்கை ஒழிந்திலர் என்பது உலகில் வேதாந்தம் என வழங்கும் இடுகுறி நூல்களை வல்லார் வாய்க் கேட்டலாகிய போலிக்

கேள்வியால் பாசங்கள் பற்றுக்கள் நீங்க முடியாது என்பதனை உணர்த்தி நின்றது. வேட்கை ஒழிந்த இடம்—பாசங்கள் பற்றுக்கள் அறுதற்குரிய இடம்—நாதாந்தம் என்பது. "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" (திருவாசகம்) எனவும், "ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே" (திருமந்திரம்) எனவும் அருளப்பட்ட மறை மொழிகளை நோக்குக. "வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே" என்பது வாய்மையான கேள்வியால் நாதாந்தத்தை அணவுதலால் பாசங்கள் பற்றுக்கள் நீங்குதலை உணர்த்தி நின்றது.]

## திருமந்திரம்.

வேதத்தி னந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தி னந்தமும் நற்போத வந்தமும்
ஓதத் தகுமெட் டியோகாந்த வந்தமும்
ஆதிக்க லாந்தமு மாறந்த மாமே.

(ஷை 8 ம்–தந் ஆறந்தம் செ. 1)

[இதனால் வேதாந்தம் சித்தாந்தம் என்பன வாய்மையில் உயரிய தத்துவங்களே என்பது வெள்ளிடை மலையாம்.]

தானான வேதாந்தம் தான்என்னும் சித்தாந் [தம்
ஆனாத் துரியத் தணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனா மலமற்றருஞ் சித்தி யாதலே.

(ஷை ஷை செ. 3.)

[தான் ஆன வேதாந்தம் என்பது நாதாந்த சோதிப் பிழம்பாகிய ஆரியனைக் கண்டு அவ் ஆரியனாகும் இடம் என்பதை உணர்த்தி நின்றது. தான் என்னும் சித்தாந்தம் என்பது சித்தாகிய உயிர் (சீவன்) சீவத்துவம் நீங்கி அந்தமாகிய — சோதிப் பிழம்பாகிய சிவத்தோடு கலந்து சிவமாய் நிற்றல் என்பதனை உணர்த்தி நின்றது. இவற்றால் வாய்மையான வேதாந்த சித்தாந்தங்களின் இலக்கணம் கூறப்பட்டது. அணுவன் — உற்ற ஆக்கையின் உறு பொருளாகிய நாதாந்த சோதிப் பிழம்பு. சிவயோகம் — சகசநிட்டை. மலம் அறுதல்—பாசங்கள் பற்றுக்கள் ஒழிதல்.]

தானவ னாகுஞ் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தநா தாந்த யோகாந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே.

(ஷை ஷை செ. 12.)

[இதனால் வேத அந்தமாகிய நாத அந்தத்தை அடைதலே தான் அவன் ஆகும் வாய்மையான சமாதி கைகூடுதல் என்பதும் அப்பொழுது போதம் எனப்படும் சித்து அந்தமாகிய சிவத்திற் கலப்பதே— திரிபுடி யற்றுச் சிவமாய் நிற்றலே சித்தாந்தம் என்பதும் நன்று பெறப்படுதல் கண்டு கொள்க.]

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்தவேதாந்தஞ் செம்பொருளாதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே.

(ஷை ஷை. செ. 25.)

[இதனால் சித்தென்னும் உயிர் அந்தமாகிப சிவத்தில் கலத்தல் என்னும் சித்தாந்தமே (சித்து + அந்தம்) சீவன் முத்தி நிலை என்பதும், வேதாந்த சித்தாந்தங்களின் ஒற்றுமையும் வேதாந்த சித்தாந்தப் பொருளாயுள்ளவர் சிவ பரம் பொருளே என்பதும் நன்று பெறப்படுதல் கண்டு கொள்க. "சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தல்" என்பதற்கு உலகில் சித்தாந்தப் பெயர் பூண்டு வழங்கும் இடுகுறியான நூல்களைப் படித்தலால் சீவன் முத்தி நிலை கைகூடும் எனப் பொருள் கண்டாரும் உளர். இது சில நடை நொடிகளால் காயம் பிணமாகிக் கழிந்தபின் உயிர் அரன் போல் நிற்கும் என்னும் உலகியலுக்கு ஒப்பிய போலிக் கொள்கைக்கு ஏற்ற போலிக் கூற்றே யன்றி, திருமந்திர சுருதி முதலிய வாய்மையான சித்தாந்தப் பொருளன்று என்பது வெள்ளிடை மலையாம். "நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே" (ஷை 3 ம் – தந் தியானம் செ. 12.) என்பதனால் வேதாந்தமாகிய நாதாந்தப் பொருள் சிவ பரம்பொருளே என்பது நன்று வலியுறுதல் கண்டு கொள்க.]

இதுகாறும் கூறியவைகளால் வேதாந்தம் சித்தாந்தம் என்பன உயரிய தத்துவங்களே என்பதும், இவற்றை உலகில் வழங்கும் சில நூல்களின் முடிபு எனவும் — சாரம் — தெளிவு எனவும் கூறி அமைதல் உலகியலுக்கு ஒப்பிய இடுகுறி வழக்கே என்பதும், விமல தநுவுடைய மெய்யடியாரே வாய்மையான வேதாந்த சித்தாந்த நிலையை அடைய வல்லவர் என்பதும், இவற்றை அடையப் பெற்றோரே சீவன் முத்தர் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

---

## இனம்! இனம்!!

## சுத்த சாதகம்

துறவின் றன்மையையும், தேகம் சித்திபெற்றால் முத்தியுண்டாமென் பதன் றன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் றன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் றன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றி யிருக்கும் வகையையும், தத்துவ ஞானதிற்குப் பரம்பரா சாதனமாயுள்ளவைகளின் றன்மையையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூலை துக்க நிவர்த்தியிலும் பரமானந்தப் பிராப்தியிலு மிச்சையுள்ள ஒவ்வொருவரும் அத்தியாவசியமாய் அறிய வேண்டியதென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.
புதுச்சேரி.

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி மறுப்பு.

"வித்தக"ப் பத்திராசிரியர் எழுதியது.

"நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தேன் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே."

திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகரும், தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்துச் சித்தாந்த சாத்திர போதகரும், சந்தான குரவச் சைவசித்தாந்த நூல்களாகிய "சிவஞான போதம்" "சிவஞான சித்தியார்" என்பனவற்றிற்கு உபய கலாநிதிப் புலவர் திலகராகிய சிவஞான முனிவர் என்பார் எழுதிய உரையைத் தழுவி விளக்க வுரை பொழிப் புரைகள் வரைந்த விற்பனருமாகிய தூத்துக்குடி ஸ்ரீமாந், போ. முத்தைய பிள்ளையவர்கள் "உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி" என்னும் பெயர் புனைந்து சில வருடங்களின் முன் எழுதி "சிவநேசன்" என்னும் பத்திரிகை வாயிலாகவும் சுவடி ரூபமாகவும் வெளியிட்ட கட்டுரை "வித்தகம்" தொகுதி. 2 இல. 7 இல் வெளி வந்துள்ளது. இக் கட்டுரை, சென்ற பிரபவ ஆண்டில் அடியேனால் எழுதிப் புதுவை நந்தி வெளியீட்டு மன்றத்தவரால் குமார தேவர் அருளிச் செய்த சுத்த சாதகத் தோடு வெயிளிடப் பட்ட "உண்மை முத்திநிலை" என்னும் கட்டுரையின் ஆராய்ச்சி உரையாகி அமைந்துள்ளது. இதற் குரிய சமாதானம் சுருங்க உரைக்கப் படக் கூடிய தாயினும், தற்கால உலகியல் நோக்கி இதன் கண் உள்ள குறைகளை நிறைவாக்கி உண்மையை நிலை நாட்டும்படி பிரபல சுருதிப் பிரமாணங்களோடு அக்காலத்திற்றானே விரிவுற எழுதப்பட்ட இம்மறுப்புரை சில காரணங்களால் வெளி வராமையால் இப்பொழுது சில மாற்றங்களோடு பலர்க்கும் பயன் படுமாறு "வித்தக" வாயிலாக வெளியிடப் படுகின்றது.

சுத்தசாதக நுதலிய பொருளும் தத்துவப் பெரியாரால் அடையப்பட்டதும் "உண்மை முத்திநிலை" என்னும் முன்னைக் கட்டுரையில் அடியேனால் விளக்கிக் கூறப் பட்டதுமாகிய உலகு கண்டிடத் தூலத்தோடு மறைந்து சிவாங்கமாதல் என்னும் உண்மைச் சைவ முத்திநிலை பிள்ளை அவர்களால் பூரணமாக அங்கீகரித்துப் பாராட்டப் பட்டமை போற்றப் படத்தக்கதே ஆகும்! இதனைக் குறித்துப் பிள்ளை யவர்கள். கூறியதாவது:—

"சித்தாந்த சைவத்துக்கு வேறான சிவாத்துவித சைவராகிய ஸ்ரீகுமார தேவர் கூறிய முத்திநிலை சைவர்கள் அனைவராலும் கொள்ளத் தக்கதே"........................................

"இக் கருத்தினை வியாசத்தில் எடுத்து ஆண்டிருப்பது பாராட்டப் படத்தக்கது" என்பது. இதற்குப் பிரமாணமாக சுத்த சாதகத்து 19 ம் செய்யுளைக் காட்டி அதன் கருத்துரையையும் சித்தாந்த போதகர் கூறி விட்டனர். அவையும் இங்கே காட்டப் படுகின்றன.

### சுத்த சாதகம்.

"மேலொருவடிவையெடுத்ததேயாகின்
மேவுமிவ்வுடலிங்கேவீழும்
மேலொருவடிவெய்யெடுத்ததின்றாகின்
மேவுமிவ்வுடலிங்கேவீழா
மேலொருசிவத்தைச்சீவன்சென்றடையு
மேவுமிவ்வுடலிங்குத்தானே
மேலொருசிவத்தின்வடிவதாமருளாய்
வெளியதாய்உலகுகண்டிடவே."

"இதன் கருத்து:— சீவன் சிவத்துடன் கலந்தால் தூல தேகம் பிணமாய் விழாது ஞானவெளியாய் ஆகும் என்பதாம்."

இதனால் சித்தாந்த சைவம் என்று இவர் துணிவது சந்தான குரவச் சைவ சித்தாந்தமே என்பதும், அந்நூல்களால் உண்மை முத்திநிலை விளக்கமுற உரைக்கப் படவில்லை என்பதும், சிவாத்துவித சைவ சித்தாந்த நூலாகிய சுத்த சாதகமே இம் முத்திநிலையை வெள்ளிடைமலைபோல விளக்கமுறக் கூறியது என்பதும் நன்று வலியுறுகின்றன. இங்ஙனம் சைவர் அனைவராலும் எட்டுணையும் ஐயமின்றிக் கொள்ளப் படவேண்டியதாகிய உண்மைச் சைவ முத்தியை அங்கீகரித்துப் பாராட்டிய ஆதீன சைவப் பிரசாரகர் மேல் எழுதிப் போந்தவைகளை நோக்குமிடத்து, இவர் சுத்தசாதகத்தை முற்றாகப் படித் துணர்ந்தபின் தமது ஆராய்ச்சியை நிகழ்த்தினார் என்பது ஐயத்துக்கு இடமாகின்றது. சந்தான குரவர் என்னும் பட்டப் பெயர் பெற்ற மெய்கண்டார், அருணந்திசிவாசாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியர் என்பவர்களை ஆதீன பிரசாரகர் தமது ஆராய்ச்சியால் உண்மை முத்தி அடைந்த தத்துவப் பெரியார் எனத் தாபித்துவிட முயலுகின்றார். ஆதலால், சித்தாந்த சாத்திர போதகர் என்னும் பட்டப் பெயர் பூண்ட தாமும் அம் முறையில் நின்று வெளியிடுவன எல்லாம் தத்துவப் பெரியார் வாக்கெனப் பிறரால் கொள்ளப்படும் என்றே ஒருகால் கருதுகின்றார் போலும் எனவும் கொள்ள வேண்

டிய தாகின்றது. சந்தான குரவச் சைவ சித்தாந்த போதகர் அக் குரவர் பால் கொண்ட அபிமானத்தால் உந்தப் பட்டவராய், வேதாகம முடிபாகிய சிவாத்துவித சைவ சித்தாந்தத்துக்கு வேறாகத் தமது படிப்பு வல்லபத்தால் சில கொள்கைகளைக் கண்டு பிடித்துச் சித்தாந்தப் பெயர் புனைந்து சில நூல்களை வெளியிட்ட அக் குரவரும், தமது நூலில் ஒரு சிறிதும் கூறப்படாது அச் சிவாத்துவித நூலாகிய சுத்தசாதகத்திற்றானே சாதக யோகங்களோடு நன்று விளக்கி வெள்ளிடை மலைபோலக் கூறப்பட்ட உண்மைச் சைவ முத்தியையே, நிலத்துட் புதைக்கப் பட்டும் அடைந்துவிட்டனர் எனக் கூறி அமைந்து, அக் கூற்றை உறுதிப் படுத்துமாறு அறுபான் மும்மை நாயன்மாரையே சேக்கிழார் பெரிய புராணப்படி சான்று காட்டி விட்டனர். இக் கூற்று முற்றாக ஆதார மற்றது என இதனை மறுத்து ஆராய்ச்சியிலுள்ள குறைகளை நிறைவு படுத்தி உண்மையை நிறுவுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஏறக்குறைய எழுநூறு வருடங்களாக, காயம் பிணமாகி விழச் செத்துப் போன பின்பு அதனைப் பிரிந்த உயிர் சிவத்தோடு அத்துவிதமாய் முத்தி யடைந்து விடும் என்னும் சைவத்துக்குப் புறம்பான மூடக் கோள்கையானது, வேதம் ஆகமம் முதலியனவாக வழங்கும் நூல்களுக்கும், திருவாசகம், தேவாரம், திருவாய்மொழி, திருமந்திரம் ஔவைகுறள் முதலிய தமிழ் மறைகளுக்கும் முற்றும் முரண் படுமாறு, வித்துவான்கள் சிலரால் தாபிக்கப் படவே, பழைய உண்மைச் சைவம் மறைந்து புதிய போலித் திருட்டுச் சைவம் ஒன்று ஆக்கமுற்றுப் பலரும் கௌரவமாகச் செடியூணுடலோம்பிக் காலங் கழிப்பதற்கே பயன் படுவதாயிற்று. இதனைத் தாபித்து விட்ட புண்ணியவான்கள் எமது ஆராய்ச்சிக் காரராகிய ஆதீன பிரசாரகரால் "சிவாநுபூதிச் செல்வர்" எனவும், அடியேனால் "உண்மை முத்திநிலை" என்னும் முன்னைக் கட்டுரையில் "வித்துவப் பெரியார்" எனவும் புகழ்ந்து போற்றப் பட்ட சந்தான குரவர்களே ஆவர். "உண்மை முத்திநிலை" என்னும் கட்டுரையில் அடியேன் சந்தான குரவரைப் பற்றி ஆராய்ந்து உண்மை கூறாது அவரை "இகழ்ந்து" விட்டதாக அக் கட்டுரையில் 38ம் பக்கத்திலும் 41, 42ம் பக்கங்களிலும் கூறப்பட்டன சிலவற்றை அநுவாதம் செய்து, அவ்வாறான கூற்றுக்குக் காரணமாயின அடியேன் "பழைய தீவினை"யும் அது காரணமான "அஞ்சாமை"யுமே எனத் தமது நுண்மாணுழை புலத்தால் உணர்ந்து கூறி அவற்றை நினைந்து எமது சித்தாந்த போதகர் வருந்து வாராயினர். இது பற்றியே,

"இவ் வியாசம் பொருத்தமுள்ள சிலவற்றையும் பொருத்த
"மற்ற பலவற்றையும் மேற்கொண்டிருத்தலால் உண்மை அறி
"யாதார் மயங்காத வாறும் உண்மை அறிந்தோர் வருந்தாத
"வாறும் இவ் வியாசத்தை ஆராய்ந்து உண்மையை நிர்ணயிக்க
"வேண்டுவது இன்றி யமையாத தாயிற்று"

என்று கூறிச் சித்தாந்த போதகர் தமது ஆராய்ச்சியை நிகழ்த்தி விட்டனர் என்பதும் நன்று புலனாயிற்று.

போதகர் புகன்றது உண்மையிலும் உண்மையே! அடியேன் எழுதிய முன்னைக் கட்டுரையில் சுத்த சாதக முதலிய பொருளாய் உலகு கண்டிட உடலோடு மறைந்து சிவாங்க மாதல் எனப்படும் அநாதியான உண்மைச் சைவக் கொள்கையையே அத்தகைய முத்தி அடைந்த தத்துவப் பெரியார் பாடற் பிரமாணங் கொண்டு ஒருவாறு நிலை நாட்ட முயன்றவனே யன்றி, அச் சுத்த சாதக முதலிய வாறு, கயிலை முதற் குரவனாகிய சற்குருநாதன் அருளால் அநுட்டிக்கப்படும் சாதகங்களால் தூலம் அமலமடைந்து சூக்குமமாக அதனோடு உலகு கண்டிட மறைந்து உண்மைச் சைவ முத்தி அடையும் பக்குவம் பெறாது நிலத்துட் புதைக்கப் பட்ட உபாசக நிட்டை யாளரும் வித்துவான்களுமாகிய சந்தான குரவர் முதலியோரைப் பற்றி விரிவாக ஆராய்ந்து வெளியிட முயன்றவனல்லன். ஆதலாற்றான் அடியேன் தீவினைப் பயன் அத்துணை அறியாமை யினின்றும் கரையேறி உண்மையைப் பூரணமாகக் கண்டு கூற விடாது தடுத்து விட்டதென அத் "தீவினையையும் அதுகாரணமான "அஞ்சாமையினையும்" நோக்கி எமது போதகர் வருந்து வாராயினர். அடியேன் சந்தான குரவரைப் பற்றிக் கிரமமாக ஆராய்ச்சி செய்யாது உலக சம்பிரதாயம் நோக்கி அவரை வித்துவப் பெரியார் எனவும், உண்மை முத்தியை "சூத்திரங்களிலும் செய்யுட்களிலும் புகட்டாமல் புகட்டி மறைபொருளாக்கி விட்டார்கள் என்பதே உசிதமாகும்" எனவும், "தத்துவப் பெரியார் திருவாக்கின் பொருளை வித்துவப் பெரியார் அறிந்திலரோ எனின், ஒருவாறு அறிந்தும் சிஷ்யர்கள் பக்குவம் நோக்கிச் சமயோசிதமாகப் பொருள் கூறினாரென்பதே உசிதமாகும்" எனவும் பிறவுமாகச் சிலபல உபசாரமாகக் கூறி விட்டமையும், அவருள் உமாபதி சிவாசாரியர் என்னும் சிவநேசர் எம்பெருமானால் ஆவேசிக்கப்பட்டுப் பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச்செடிக்கும் சுருதி யுத்திக்குப் பொருந்தாத முறையாக உண்மைச் சைவ முத்தியை அளித்து விட்டனர் எனத் திரோபவமாகக்கூற நேர்ந்தமையும் அடியேன் தீவினைப் பயனே எனப் போதகர் வருந்தியது மிகையாகாது. இவ்வாறு அடியேன் செய்த குறையைச் சொல்லாமல் சொல்லி மேல் அக் குரவரைப் பற்றி உண்மையையே உரைத்து விடும்படி அடியேனைத் தூண்டாமல் தூண்டி விட்டனர் எமது ஆதீன சைவப் பிரசாரகர் என அறிதற்பாற்று. இதன் பொருட்டாகப் போதகருக்குநன்றி கூறுவதோடு மேல் அச் சந்தான குரவரைப் பற்றி இயன்றவரை ஆராய்ந்து உண்மையையே கூற வேண்டியதும் அடியேன் கடனாயிற்று.

உண்மை முத்தியை அடைய வேண்டியவன் ஒருவன் சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளை அநுட்டிக்குங்கால் கர்மம் காரணமாக இறந்துவிடாது படியேற்றம் பெறும் பக்குவமுடையனாயின், அப் பக்குவத்தை அறிந்த சிவம் முன்னிலையில் குரு வடிவாய்ப் போந்து அவனுக்குச் சகச நிட்டையை அருள் செய்யும் என்பதும், அச் சகச நிட்டையாளனே அருளமுதமாகிய சூக்கும கற்பம் அருந்தித் தனது உடல் அள்ளூறுக்கையாகிக் கரைந்து ஓ வடிவம் என்னும் பிரணவ மந்திர சரீரம் பெற்று அதனோடு சிதாகாசப் பெரு வெளியில் உலகு கண்டிட மறைந்து உண்மைச் சைவ முத்தி அடைவான் என்பதும், சகச நிட்டையை அடையும் பக்குவம் பெறாத சவிகற்ப நிர்விகற்ப நிட்டை யாளராகிய உபாசக நிட்டையாளர் அந் நிலையில் எத்துணைக் காலம் வீற்றிருப்பினும் தம் தம் பிராரத்த ஒழிவின் கண்ணே சரீரம் பிணமாகி விழ இறந்து பிறவி வலைப் படுபவரே என்பதும் ஆராய்ச்சியாளராகிய சித்தாந்த போதகரால் அங்கீகரித்துப் பாராட்டப் பட்ட சுத்தசாதகத்தின் உள்ளுறையாகும். அந் நூலிற் கூறிய நிட்டை இலக்கணத்தை உற்று நோக்குவார்க்கு இவ் உண்மை தெற்றெனப் புலப்படாத தாகாது. இதுவே தத்துவப் பெரியார் துணிபும் வேத உண்மையும் ஆம் என்பதும் இதுவரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றாலும் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு நன்று வலியுறுத்தப் பட்டது. சாதக யோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகிப் படியேற்றம் பெறுவதினால் அப் பக்குவ சீவனது உடலுயிர் என்னும் இருவினையும் அவற்றால் உளவாகும் துன்பங்களும் நான் நீ என்னும் பேதமும் அற்று விடும் என்பதும் இருவினை சொரூபமே உடலுயிர் என்பதும் பின் வரும் பிரமாணங்களாலும் நன்று புலப்படும்.

## திருவாசகம்.

"..................................................

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை. மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா வின்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ அருள்நீர் ஓட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
.................................................."

(ஷை திருவண்டப்பகுதி)

"......ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென் னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

(ஷை திருத்தெள்ளேணம் செ. 18)

என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

(ஷை குலாப்பத்து செ. 3)

ஊச லாட்டுமிவ் வுடலுயு ராயின இருவினை யறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவ னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புத மறியேனே.

( ஷை அற்புதப் பத்து செ. 8 )

## அப்பர் தேவாரம்.

வானைக்கடந்தண்டத்தப்பான்மதிப்பனமந்திரிப்பார்
ஊனைக்கழித்துய்யக்கொண்டருள்செய்வனவுத்தமர்க்கு
ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனநங்கையஞ்ச
ஆனையுரித்தனகாண்கஐயாறனடித்தலமே.

(ஷை திருவையாறு திருவிருத்தம் செ. 4)

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
தேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கும்
ஏனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

( ஷை கோயிற்றிருவிருத்தம் பண்கொல்லி செ. 6 )

## சுந்தரர் தேவாரம்.

வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானைஅருள்புரிந்து
ஊன்உயிர்வேறுசெய்தான்நொடித்தான்மலைஉத்தமனே.

( ஷை திருநொடித்தான்மலை பண். பஞ்சமம் செ. 1 )

( தொடரும் )

Imprimerie "VITTAGAM"— Pondichery.

Le Gerant. R. Nagarattinam.